**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண் :** 66 **நாள்:** 14.05.2018

**பெருநகர சென்னை மாநகராட்சியின் நம்ம சென்னை என்ற புதிய செயலியில் பிறப்பு சான்றிதழ், இறப்பு சான்றிதழ், சொத்து வரி, தொழில் வரி மற்றும் வர்த்தக உரிமம் போன்ற சேவைகள் இணைக்கப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்களால் அம்மா மாளிகையில் 23.01.2018 அன்று பெருநகர சென்னை மாநகராட்சியால் வடிவமைக்கபட்ட மக்கள் குறை தீர்க்கும் "நம்ம சென்னை" செயலி துவக்கி வைக்கப்பட்டது. இந்த செயலி Android மற்றும் Apple ios பயன்பாட்டாளர்களும் பதிவிறக்கம் செய்யும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த செயலியை இதுவரை 30,000க்கும் மேற்பட்ட பயனீட்டாளர்களால் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த செயலி மூலம் சுமார் 3,738 புகார்கள் பெறப்பட்டு, 3688 புகார்கள் சரிசெய்யப்பட்டு மீதமுள்ள 50 புகார்கள் விரைவில் சரிசெய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில், 1) பிறப்பு சான்றிதழ், 2) இறப்பு சான்றிதழ், 3) சொத்து வரி 4) தொழில் வரி, 5) வர்த்தக உரிமம் போன்ற ஐந்து சேவைகள் நம்ம சென்னை செயலியில் இணைக்கப்பட்டுள்ளது.

நம்ம சென்னை செயிலியைப் பயன்படுத்தி பொதுமக்கள் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் பிறப்பு, இறப்பு, தொழில் வரி, சொத்து வரி மற்றும் வர்த்தக உரிமம் சான்றிதழ்கள்/ரசீதுகளை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். மேலும், கூடுதலாக சொத்து வரி, தொழில் வரி மற்றும் வர்த்தக உரிமம் நிலையினை (payment status) இச்செயலி வாயிலாக அறிந்துகொள்ளுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா-கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**